[2012 மே 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 238, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செந்தில்குமார், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

238—

பாலம்

***3926—திரு. எஸ். செந்தில்குமார்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவெறும்பூர் தொகுதி, பாரத மிகு மின் நிலைய தொழிலாளர்கள் குடியிருப்புகளுக்கு இடையே உள்ள திருச்சிராப்பள்ளி—தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவெறும்பூர் தொகுதி, பாரத மிகு மின் நிலைய (BHEL) *தொழிலாளர்கள் குடியிருப்புக்கு இடையே உள்ள திருச்சிராப்பள்ளி—தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் பாலம் அமைப்பதற்கு பாரத மிகு மின் நிலையத்திற்குச் சொந்தமான 3.40 ஹெக்டேர் நிலத்தினை வழங்கி, மேம்பாலக் கட்டுமான செலவினை பாரத மிகு மின் நிலையம் ஏற்பதாக இருந்தால் மட்டுமே பாலம் அமைக்க பரிசீலிக்க இயலும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செந்தில்குமார் அவர்கள்.*

திரு. எஸ். செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* BHEL *குடியிருப்புப் பகுதியிலிருந்து தொழிற்சாலைக்கு*

2012 மே 9]

வேலைக்குச் செல்லும் தொழிலாளர்கள், சுற்று வட்டாரங்களிலிருந்து BHEL குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள பள்ளிகளுக்குச் செல்லும் மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் என சுமார் 10 ஆயிரம் பேர் தினந்தோறும் காலையிலும், மாலையிலும் நெடுஞ்சாலையைக் கடக்கும் ஆபத்தான நிலையுள்ளது. எனவே, BHEL நிறுவனத்திடமிருந்து அரசே அனுமதி பெற்றும், அந்த நிலத்தை கையகப்படுத்தும்பட்சத்தில் விபத்துகளைத் தடுக்கின்ற வகையிலே இந்தப் பணியைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலை பொதுவாக அனைவரும் பயன்படுத்தக்கூடிய வகையில் உள்ளது. அரசுக்குச் சொந்தமான சாலை அது. அதில் தனிப்பட்ட நிறுவனம் பாலம் கட்டுவது இயலாத காரியம். எனவே, அரசு அந்த நிறுவனத்தை அழைத்துப் பேசி, பொதுமக்களின் நலன் கருதி பாலத்தைக் கட்டி முடிக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர், திருச்சி வரையிலான சாலை தேசிய நெடுஞ்சாலை எண் 67—ல் கிலோ மீட்டர் 80/0 முதல் கிலோ மீட்டர் 136/490 வரை உள்ள சாலையாகும். இச்சாலை கிலோ மீட்டர் 80/0 முதல் கிலோ மீட்டர் 122/0 வரை 4 வழிச் சாலை அமைக்கப்பட்டு, சாலைப் பணிகள் முடிவுற்று, கிலோ மீட்டர் 128/480—ல் சுங்க வரி வசூல் செய்யப்படுகின்றது. கிலோ மீட்டர் 128/480 முதல் கிலோ மீட்டர் 136/490 வரை ரெயில்வே மேம்பாலச் சந்திப்பு மற்றும் பேருந்து நிலையம் ஆகியவற்றுக்கு மட்டுமே நில எடுப்பு செய்யப்பட்டுள்ளது. திருச்சி பாரத மிகு மின் நிலையம், தஞ்சாவூர்—திருச்சி சாலையில் இடதுபுறம் கிலோ மீட்டர் 126/735—ல் அமைந்துள்ளது. இத்திட்டத்தில் பாரத மிகு மின் நிலையத் தொழிலாளர்கள், குடியிருப்புகளுக்குச் செல்ல மேம்பாலம் அமைத்திட திட்டத்தில் பணியில் சேர்க்கப்படவில்லை. பிரிவுச் சாலை அமைத்திட மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.